# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
******

**முறையீட்டு மனு எண்: 229/2018/மா**
**ஆணை நாள்: 08–02–2020**

**திரு. வெ. ராஜு,**
**நரசோதிபட்டி,**
**சேலம் -4.** – முறையீட்டு மனுதாரர்

**உதவி ஆணையர்,**
**சூரமங்கலம் வார்டு அலுவலகம்,**
**சேலம் மாநகராட்சி.** – எதிர் மனுதாரர்

சேலம் மாநகராட்சி, 148, செங்கல்பேட்டை நரசோதிபட்டி கிராமம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. வெ. ராஜு என்பவரது 8.11.2018 தேதியிட்ட முறையீட்டு மனு 9.11.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.229/மா/2018 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, சூரமங்கலம் உதவி ஆணையரிடம் அறிக்கைகள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

சேலம் மாநகராட்சி, எண்.148, செங்கல்பேட்டை, நரசோதிபட்டி கிராமம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. வெ. ராஜு என்பவர் தனது 9.11.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில், சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு, நரசோதிபட்டி கிராமம், கிராமநத்தம் ச.எண்.19/1-ல் உள்ள வழித்தடம், சுமார் 532 ச.அடி நிலம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி உள்ளது என சூரமங்கலம் உதவி ஆணையருக்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்கக்கோரினார் என்றும், மேற்குறிப்பிட்ட கோரிக்கை குறித்து பரிசீலனை செய்த சூரமங்கலம் உதவி ஆணையர், ஆக்கிரமிப்புக்குள்ளான நிலம் கிராமநத்தம் என வகைப்படுத்தப்பட்டதால், அவ்வாக்கிரமிப்புகளை அகற்றிட படிவம் 7 மற்றும் 6 ஆகியவற்றை ஆக்கிரமிப்புதாரருக்கு வழங்கி ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சேலம் மேற்கு வட்டாட்சியருக்கு 1.102019 நாளிட்ட கடிதத்தினை அனுப்பியதாகவும், ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளாத் உதவி ஆணையர் மீது கீழ்கண்டவாறு நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

1. உதவி ஆணையர், சூரமங்கலம் அவர்களுக்கு ரூ.5 லட்சம் அபராதம் விதிக்கவும் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்;
2. விசாரணைக்கு சென்னை வந்து செல்ல வழக்கு செலவு தொகை/இழப்பீடு பெற்றுத்தரவும்;

மேற்காண் புகார் தொடர்பாக முறையீட்டு மனுதாரர் 20.12.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளித்தார். தனது வாக்குமூலத்தில் புகார் மனுவில் தெரிவித்ததையே மீண்டும் தெரிவித்தார்.

மேற்படி புகார் குறித்து சூரமங்கலம் உதவி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. சூரமங்கலம் உதவி ஆணையர், அவரது 24.7.19 நாளிட்ட கடித எண்.இ9 (கே21)1872/2018 கடிதத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள இடம் வருவாய் துறைக்கு சம்மந்தப்பட்ட பகுதி என்பதால், சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்புதாரருக்கு படிவம் 7 மற்றும் படிவம் 6 தயார் செய்து வழங்கி உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து 1.10.2018 நாளிட்ட கடிதத்தில் வட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும், பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்ததால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டிருந்தது என்றும், வருவாய்துறை மற்றும் மாநகராட்சி நிர்வாகம் மூலம் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், 28.8.2019-ஆம் தேதியில் மேற்கண்ட ஆக்கிரமிப்பு பகுதியை வருவாய் துறையினர் மூலம் மாநகராட்சி ஒத்துழைப்புடன் முழுமையாக அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் சூரமங்கலம் உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் நன்கு பரிசீலிக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பினை விரைவில் அகற்றுவதாக உதவி ஆணையர் உறுதி கூறியுள்ளதை ஏற்று, இப்பொருள் குறித்து தொடர் நடவடிக்கை கைவிடப்படுகிறது. மேலும் உதவி ஆணையர், சூரமங்கலம் அவர்களின் அறிக்கைப்படி மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றியதற்கான அறிக்கையை 15 தினங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென சூரமங்கலம் உதவி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2020-ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 8-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவிப் பதிவாளர்.

பெறுநர்

1. திரு. வெ. ராஜா,
   148, செங்கல்பேட்டை,
   நரசோதிபட்டி,
   சேலம் -4.

2. உதவி ஆணையர்,
   சூரமங்கலம் மண்டலம்,
   சேலம் மாநகராட்சி.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி